IntSym 2019
9th International Symposium

# பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் ஆய்வுக் கலாசாரம்: இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**A.R.M. Mahsoom[67], K.M. Shaheem[68] & M.Z. Zunoomy[69]**

Correspondence: mahsoomzahry92@gamil.com

**ஆய்வுச் சுருக்கம்**

உயர் கல்வி வழங்குவதில் அரச பல்கலைக்கழகங்களின் வகிபாகம் மகத்தானது. பல்கலைக்கழகம் என்றாலே ஆய்வு என்று சொல்வுமளவுக்கு இரண்டுக்குமிடையே நெருக்கமான தொடர்பு உண்டு. பல்கலைக்கழக மாணவர்களுக்கு மத்தியில் ஆய்வுக் கலாசாரம் என்பது மிக முக்கியமானதொன்றாகும். அவர்கள் பல்கலைக்கழகங்களில் படிக்கின்ற காலங்களில் முதலே ஆய்வுகளுடன் பின்னிப் பிணைந்திருப்பது அவசியமாகும். ஓர் பட்டதாரி ஓர் ஆய்வாளராகவே அன்றி இருக்க முடியாது. இதன்போது ஒரு பட்டதாரி சமூகத்தைப் பார்க்கின்ற போது, சமூகம் சார் பிரச்சினைகளில் நுழைகின்ற போது அவர் ஆய்வுப் பின்னணியில் நின்றே நோக்க வேண்டியது அவசியமாகும். இந்தவகையில், இலங்கை பல்கலைக்கழகங்களில் தென்கிழக்குப் பல்கலைக்கழகமானது தேசிய நீரோட்டத்தில் இருந்து தேசிய மற்றும் சமூக பிரச்சினைகளுக்கு காத்திரமான ஆய்வுகளை முன்வைக்க வேண்டிய பொறுப்புள்ள நிறுவனம் என்றவகையில் இப்பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப்பீடம் இங்கு ஆய்வுப் பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வில் மாணவர்களுக்கு மத்தியில் ஆய்வின் முக்கியத்துவத்தினை உணர்த்துவதே பிரதான நோக்கமாகும். குறித்த பீடத்தில் மூன்று வருட காலத்துக்குள் ஆய்வுக் கலாசாரம் மேம்பட்டுள்ளதா? என்பதைக் கண்டறிவதே ஆய்வுப் பிரச்சினையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்விற்காக 2016-17 கல்வியாண்டில் கற்றுக்கொண்டிருந்த மூன்றாம் வருடத்தைச் சேர்ந்த மாணவர் ஆய்வு மன்ற உறுப்பினர்கள் 50 பேர் ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். சமூகவியல் பண்புசார் ஆய்வான இதில் ஆய்வுப் பிரதேச மாணவர்கள் மூலம் பெறப்பட்ட வினாக்கொத்து, விரிவுரையாளர்கள் மூலமான கலந்துரையாடல் போன்ற முதலாம் நிலைத் தரவுகளின் ஊடாக குறித்த பீடத்தில் கடந்த மூன்று ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது ஆய்வுக்கலாசாரம் மேம்பட்டுள்ளதா என்பதை இனங்கண்டு ஓர் விபரண ஆய்வாக முன்வைக்கப்பட்டுள்ளது. எனவே, ஆய்வுக் கலாசாரம் மேம்பட்டுள்ளது எனவும் அதற்காக மாணவர் ஆய்வு மன்றம் பங்களிப்பு செய்துள்ளது என்பதுவே இந்த ஆய்வின பிரதான கண்டறிதல்களாகும்.

**பிரதான சொற்கள்:** ஆய்வுக் கலாசாரம், பல்கலைக்கழகம், முக்கியத்துவம்

## அறிமுகம் (INTRODUCTION)

ஆய்வு என்பது உண்மையானதை கண்டறியும் முயற்சியாகும். ஏதேனும் ஒரு விடயத்தை மிகக் கவனத்துடனும், விடா முயற்சியுடனும் நுட்பமாய்த் தேடுவதைக் குறிக்கும் (சாஹிர்,2012). மனிதனது தேடல் உண்மையைக் கண்டறிவதாகவே உள்ளது. ஆயினும் உண்மையைக் கண்டறிவதற்கான சிறந்த வழி ஆய்வாகும். 'ஒரு இனங்காணப்பட்ட பிரச்சினைக்கான தகவல்களையும் அதனுடைய கருத்துக்களையும் உண்மையாகவும், பூரணமாகவும், அறிவு பூர்வமாகவும் தேடுதல் ஆய்வு எனப்படும்' (பீ.எம்.குக்). இந்தவகையில், ஆய்வு என்பது புலமை சார்ந்த தொழிற்பாடாகின்றது. பிரச்சினைகளை இனம் காண்பதும் அதற்கு மீள் வடிவம் கொடுப்பதும் ஆய்வின் தொடக்கமாகின்றது. எடுகோள்களை உருவாக்குதல், தரவுகளை சேகரித்தல், ஒழுங்கமைத்தல், மதிப்பீடு செய்தல், தொகுத்தல், முடிவுகளைக் காணுதல் என்றவாறு ஆய்வுகளின் பரிமாணங்கள் காணப்படுகின்றன. இந்தவகையில், இவ்வாறான ஆய்வு அம்சங்களில் நல்ல நடைமுறைத் தன்மையை தக்க வைத்துக் கொள்வதற்கும், மேம்படுத்துவதற்குமான ஓர் முக்கிய அங்கமாக ஆய்வுக் கலாசாரம் காணப்படுகின்றது. அதாவது உயர்தர, உயர் நெறிமுறை தரங்களை கொண்ட ஆய்வுகளை உருவாக்குவதற்கு சிறந்த ஆய்வுச் சூழல் அவசியப்படுகின்றது. ஆய்வுக்

[67] Department of Arabic, South Eastern University of Sri Lanka.
[68] Department of Arabic, South Eastern University of Sri Lanka.
[69] Department of Arabic, South Eastern University of Sri Lanka.

கலாசாரமானது ஆய்வுகளை மேற்கொள்வதற்கான நடைமுறைசார்ந்த உந்துதலை அளிக்கின்றது. இதன்போது, இவ்வாய்வுக் கலாசாரமானது சமூகத்தின் நடத்தைகள், பெறுமானங்கள், நடத்தைகள், எதிர்பார்ப்புக்கள் போன்றவற்றை பிரதிபலிப்பதாக அமையும் (UKRIO).

இந்தவகையில், இவ்வாய்வானது மெய்யினைக் கண்டறியும் புலமைப் பயிற்சி ஆகும். இன்றைய நவீன யுகத்தில் ஆய்வுக்குத் தனியானதொரு இடம் கொடுக்கப்பட்டுள்ளது. இன்று சமூகம் எதிர்நோக்குகின்ற சகல விதமான பிரச்சினைகளுக்குமான தீர்வுகள் ஆய்வுப் பின்னணியில் நின்றே நோக்கப்பட வேண்டும். வெறும் உணர்ச்சி வயப்பட்ட பேச்சுக்கள், வியாக்கியானங்கள், சாத்தியமற்ற கற்பனைகள் என்பவற்றுக்கு அப்பால் ஆக்கபூர்வமான ஆய்வுகளை முன்மொழிவதன் ஊடாக சிறந்த பிரதிபலன்களை கண்டுகொள்ள முடியும். இந்த வகையில் பல்கலைக்கழக சமூகமானது அது சார்ந்த சமூகத்தில் மிக உயர்ந்த இடத்தில் வைத்து நோக்கப்படுகின்றது. பல்கலைக்கழக பட்டதாரிகள் அச்சமூகத்தின் முதுகெலும்புகளாகவும், உயிர் நாடிகளாகவும் நோக்கப்படுகிறார்கள். இத்தகைய பல்கலைக்கழக பட்டதாரிகளை உருவாக்குவதில் இலங்கை அரசாங்கம் பல மில்லியன் ரூபாய்களை செலவிடுகின்றது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு மத்தியில் ஆய்வுக் கலாசாரம் என்பது மிக முக்கியமானதொன்றாகும். அவர்கள் பல்கலைக்கழகங்களில் படிக்கின்ற காலங்களில் முதலே ஆய்வுகளுடன் பின்னிப் பிணைந்திருப்பது அவசியமாகும். ஓர் பட்டதாரி ஓர் ஆய்வாளராகவே அன்றி இருக்க முடியாது. இதன்போது ஒரு பட்டதாரி சமூகத்தைப் பார்க்கின்ற போது, சமூகம் சார் பிரச்சினைகளில் நுழைகின்ற போது அவர் ஆய்வுப் பின்னணியில் நின்றே நோக்க வேண்டியது அவசியமாகும். குறிப்பாக, பல்கலைக்கழக மாணவர்களுக்கு மத்தியில் ஆய்வுக் கலாசாரம் அரிதாகியதன் விளைவுதான் இன்றைய வேலையில்லாப் பட்டதாரிகள் எனலாம்.

இவ்வகையில் இன்று பல்கலைக்கழக மாணவர்களுக்கு மத்தியில் ஆய்வுச் சிந்தனை இருக்கின்றதா? ஆய்வுக் கலாசாரம் எந்த மட்டத்தில் உள்ளது? என்பதைக் கண்டறிந்து அதன் குறைகளை நிவர்த்தி செய்து பல்கலைக்கழக மாணவர்களை வெறும் பட்டதாரி சமூகமாக அல்லாமல் நாட்டுக்கும், சமூகத்துக்கும் பணிசெய்யக்கூடிய ஆளுமையுள்ளவர்களாக உருவாக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். இந்தவகையில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப்பீட மாணவர்களை மையப்படுத்தியதாக இவ்வாய்வு அமைகின்றது.

## ஆய்வுப் பிரச்சினை (RESEARCH PROBLEM)

பல்கலைக்கழக மாணவர் மத்தியில் ஆய்வுக் கலாசாரம் என்பது மிக முக்கியமானதாகும். ஒரு பட்டதாரி ஆய்வாளனாகவே அன்றி இருக்க முடியாது. இன்று எமது நாடு பல்கலைக்கழகப் பட்டதாரிகள் தொடர்பாக பல சிக்கலான பிரச்சினைகளை சந்தித்துள்ளது. இது மாணவர்களுக்கு மத்தியில் ஆய்வு சிந்தனையில் ஏற்பட்ட வறுமையின் விளைவாகும். கடந்த காலங்களுடன் ஒப்பிட்டு நோக்கும் போது ஆய்வுக் கலாசாரம் மேம்பட்டுள்ளதா? என்பதை இனங்காண்பதே ஆய்வுப் பிரச்சினையாகும்.

## ஆய்வின் நோக்கங்கள் (OBJECTIVES OF THE STUDY)

- மாணவர்களுக்கு மத்தியில் கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது தற்போதைய ஆய்வுக் கலாசார அடைவுகளை அறியப்படுத்தல்
- பல்கலைக்கழக மாணவர்களுக்கு மத்தியில் ஆய்வுக் கலாசாரத்தின் முக்கியத்துவத்தினை உணர்த்துதல்

## ஆய்வின் முக்கியத்துவம் (IMPORTANCE OF THE STUDY)

இன்று எமது நாட்டில் பல்கலைக்கழக பட்டதாரிகளின் வேலையில்லாப் பிரச்சினை பாரிய சிக்கலாக மாறியுள்ளது. வேலையில்லாத பட்டதாரிகளின் பிரச்சினை ஒரு புறமிருக்க வேலைக்குத் தகுதியான பொருத்தமானவர்கள் இல்லாமை இன்னுமொரு பிரச்சினையாக வளர்ந்து வருகின்றது. இன்று பல்கலைக்கழக மாணவர்களுக்கு மத்தியில் ஆய்வுக் கலாசாரம் அரிதாகியதன் விளைவுதான், நாம் இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகள் எனலாம். இத்தகைய ஒரு சூழ்நிலையில் இந்த ஆய்வு காலத்தின் தேவையாகவும், உண்மையான பிரச்சினைகளை இனங்காணவும் உதவும் என்பதாலும் இவ்வாய்வு சகல மட்டங்களிலும் முக்கியத்துவம் பெறுகின்றது. மேலும் பல்கலைக்கழக மாணவச் சமூகத்தின் ஆய்வுக்கலாசாரம் பற்றிய களநிலவரத்தை ஆராய முற்படுகின்றது என்றவகையிலும் இவ்வாய்வு முக்கியத்துவம் பெறுகின்றது.

## ஆய்வு முறையியல் (RESEARCH MATHODOLOGY)

முதலாம், இரண்டாம் நிலைத் தரவு மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு அளவுசார், பண்புசார் தரவுகளின் படி விபரண ஆய்வு முறையியல் (Descriptive Analysis) இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளது. முதலாம் நிலைத் தரவுகள் கலந்துரையாடல் மூலமும், அளவியல் தரவுகளுக்காக வினாக் கொத்துக்களைக் கொண்ட மாதிரியைப் பயன்படுத்தி தரவுகள் பெறப்பட்டன. இதற்காக 2016-17 கல்வியாண்டில் கற்றுக்கொண்டிருந்த மூன்றாம் வருடத்தைச் சேர்ந்த மாணவர் ஆய்வு மன்ற உறுப்பினர்கள் 50 பேர் எழுமாறியாக தெரிவுசெய்யப்பட்டனர். விரிவுரையாளர்கள், மாணவர்கள், பட்டதாரிகள் ஆகியோருடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. இரண்டாம் நிலைத் தரவுகளுக்காக சஞ்சிகைகள், இணையத்தளம் ஆகியவற்றைப் பயன்படுத்தி தரவுகள் திரட்டப்பட்டன. அத்தோடு முதலாம் நிலைத் தரவுகள் Excel worksheet மூலமும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

## இலக்கிய மீளாய்வு (LITERATURE REVIEW)

பல்கலைக்கழக பீடங்கள் மத்தியில் ஆய்வு உற்பத்தியை மேம்படுத்தல்: ஓர் மதிப்பீடு எனும் தலைப்பிலான ஆய்வொன்று ஜோன் வோடர்ஸ்கி (1991) மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் விடயதானங்கள், துல்லிய தகவல் அறிதிறன், முறைமையான போக்கு, கருத்தரங்களை நடாத்தல், ஆய்வுச் செலவுகள் போன்றவற்றை அபிவிருத்தி செய்வது தொடர்பானவற்றைப் பேசுகின்றன. குறிப்பாக, இவ்வாய்வானது நேர்மறை ஆய்வுக் கலாசாரமொன்றை உருவாக்குதல், பராமரிப்பு செய்தலை வலியுறுத்துகின்றது.

அறிவ சார்ந்த சமூகத்திற்கு ஆதரவு வழங்குவதற்கு ஆய்வுக் கலாசாரத்தை மேம்படுத்துவதற்கான உக்திகள் எனும் தலைப்பில் நீதா பாபோரிகர் (2015) மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது, பொருளாதார மேம்பாட்டு விடயங்களைப் பற்றி கலந்துரையாடுகின்ற போது அது அதி முக்கியத்துவமுடையதாக கருதப்படுவதாக பேசுகின்றது. மேலும் இன்றைய சமூகம் அறிவுமயமாகி உள்ளதால், இங்கு ஆய்வு மிக முக்கியதாக காணப்படுகின்றது. இதன்போது, வணிகம்சார்ந்த, சமூகவியல் சார்ந்த ஆய்வுகளானவை வெறும் அனுமானமானதாக இருக்க முடியாது. இன்றைய கால தொழிநுட்பமானது ஆய்வாளர்களுக்கு சிறந்த ஆய்வுகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பங்களை வழங்குகின்றன. இந்தவகையில், இவ்வாய்வானது ஆய்வுக் கலாசாரத்தை உருவாக்குவதன் மூலம் அறிவு உருவாக்கம், அறிவுப் பரிமாற்றம், அறிவுப் பகிர்வு என்பவற்றுக்கு பங்களிப்பு செய்வதாக அமைகின்றது.

உயர் கல்வி மட்ட கற்றல் - கற்பித்தல் துறையில் ஆய்வுச் செயன்முறையை மேம்படுத்தல் எனும் தலைப்பிலான விடய ஆய்வொன்றினை டேவிட் கோஸ்லிங் (2000) மேற்கொண்டுள்ளார். பிரிட்டனிலுள்ள உயர் கல்வி நிறுவனங்களில் கற்றல் - கற்பித்தல் துறையில் ஆய்வுச் செயற்பாட்டிற்கான திறனை வடிவமைப்பதாக அமைந்துள்ளது. இவ்வாய்வானது கல்வியியல் ஆய்வை அதிகரிப்பதற்கான திட்டங்களைப் பற்றி பேசுகின்றது. இத்திட்டங்கள் செயற்திறன்

மிக்க கல்விசார் ஆய்வுக் கலாசாரத்தை உருவாக்குவதைப் பற்றியதாக அமைந்துள்ளன. இந்தவகையில் இவ்வாய்வானது, உயர்கல்வி நிறுவனங்களில் கற்றல் - கற்பித்தல் துறையில் ஆய்வுச் செயற்பாட்டை ஊக்குவிக்க பொருத்தமான உக்திகளை அடையாளங் காணவும், கல்வியியல் ஆய்வை எளிமைப்படுத்துவதற்கும், ஊக்குவிப்பதற்குமான வழிகளைப் பற்றிய தெளிவான புரிதலை ஏற்படுத்தவும் முனைகின்றது.

இலங்கைப் பல்கலைக்கழகங்களை மையப்படுத்தி ஆய்வுக் கலாசாரம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை ஆய்வாளர்களின் தேடலுக்குட்பட்டவரை கண்டுகொள்ள முடியவில்லை.

### கண்டுபிடிப்புக்களும் கலந்துரையாடலும் (FINDINGS & DISCUSSION)

இவ்வாய்வானது அனைவராலும் மிக முக்கியமானதொன்றாக பார்க்கப்பட்டாலும் பல்கலைக்கழக பட்டதாரி சமூகத்திற்கு இன்றியமையாத ஒன்றாகும். இவ்வாய்வு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப்பீடத்தை மையமாக வைத்தே அமையப் பெற்றுள்ளது. இப்பீடம் 2005ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து மாணவர்களுக்கு மத்தியிலான ஆய்வுக் கலாசாரம் அரிதாகவே இருந்து வந்துள்ளதனை விரிவுரையாளர்களுடனான கலந்துரையாடலில் இருந்தும் பழைய மாணவர்களுடனான கலந்துரையாடல்களில் இருந்தும் அடையாளப்படுத்த முடிந்தது. மாணவர்களுக்கு மத்தியில் ஆய்வு வறுமை பரவலாகவே இருந்ததையும் அவதானிக்க முடியுமாக இருந்தது.

இப்பீட மாணவர்களுக்கு மத்தியில் ஆய்வுக் கலாசாரம் ஏன் அரிதாகக் காணப்பட்டது? என்பதனை ஆய்வுக்குட்படுத்திய போது பின்வரும் காரணங்களை அடையாளப்படுத்த முடிந்தது.

- **ஆய்வு தொடர்பான தெளிவின்மையும் பிழையான புரிதலும் :**

  ஆய்வு என்றால் என்ன? அதன் முக்கியத்துவம் என்ன? ஏன் ஆய்வு அவசியம்? போன்ற விடயங்களில் அடிப்படை தெளிவு மாணவர்களுக்கு மத்தியில் காணப்படவில்லை. ஆய்வு செய்வதற்கு கடுமையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்ற மனோநிலையின் காரணமாக ஆய்வு பற்றிய விடயங்களில் கவனம் செலுத்துவது குறைவாக காணப்படல். ஆய்வென்பது விரிவுரையாளர்களுக்கு மாத்திரமே உரியது , ஆய்வு செய்வது பாரிய விடயம் ,அது மாணவர்களுக்கு அவசியமற்றது போன்ற மனோநிலைகள் காணப்பட்டன. ஒரு துறையில் விஷேட கற்கையை தொடர்ந்தால் மாத்திரமே இறுதி ஆண்டில் ஆய்வொன்றை சமர்பிக்க வேண்டும் என்ற உணர்வும் , இல்லாவிட்டால் ஆய்வே அவசியமில்லை எனும் ஒரு நிலையும் அவதானிக்கப்பட்டது.

- **மாணவர்களிடத்தில் வாசிப்பின், தேடலின் மீதான ஆர்வமின்மை :**

  மாணவர்கள் பல்கலைகழகத்தில் பாடவிதானங்களுடன் மாத்திரம் சுருங்கியிருக்கும், தங்கியிருப்பதால் பாட விடயங்களையே வாசிக்கும் பழக்கம் காணப்பட்டதாக சில மாணவர்களுடனான கலந்துரையாடல்களின் போது அடையாளப்படுத்த முடிந்தது. புதிய விடயங்களை பெற்றுக்கொள்ள பரந்த வாசிப்பு அவசியம் என அனைவரும் உணர்ந்திருந்தாலும் அதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதில் அவர்கள் கவனயீனமாக இருக்கின்றனர். குறிப்பாக, ஒரு பிரச்சினையை ஆய்வுக் கண்ணோட்டத்தில் நோக்குகின்ற தன்மை குறைந்த அளவில் காணப்படுவதாகவும் தெரிவித்தனர்.

- **பல்கலைக்கழகம் தொடர்பான பிழையான புரிதல் :**

  பல்கலைக்கழகம் சென்றால் படிக்க தேவையில்லை என்றும் அது கேளிக்கை எடுப்பதற்கான இடம் மாத்திரமே என்றும் மாணவர்கள் புரிந்திருந்தமை கவனிக்கப்பட்டது. பல்கலைக்கழகங்களில் கற்கும் 3-4 வருடங்களை மகிழ்ச்சியாக கழிக்க விரும்புவதுடன், பரீட்சைகளில் சாதாரண சித்தியுடன் ஒரு பட்டத்தை பெற்றுச் செல்வதை விரும்புகின்றவர்களாக மாணவர்கள் காணப்படுகின்றனர். இதன்காரணமாக, சமூகத்திற்கு பங்களிப்புச் செய்வது தொடர்பான ஆர்வம் ஏற்படாமையினால், ஆய்வு முயற்சிகளின் பால் ஈடுபாடு காட்டுவதை விட்டும் மாணவர்கள் தவிர்ந்து இருக்கின்றனர்.

இவ்வாறு பீட மாணவர்களுக்கு மத்தியில் ஆய்வு கலாசாரம் என்பது மிகவும் வறுமையான நிலையிலே காணப்பட்டது. இவ்வாறு கடந்த காலங்களில் மாணவர்களுக்கு மத்தியில் ஆய்வு கலாசாரம் என்பது அரிதாகவே இருந்த போதிலும் தற்பொழுது அந்நிலை மாறி மாணவர்களுக்கு மத்தியில் ஆய்வுச் சிந்தனை மேம்பட்டு வருவதை அவதானிக்க முடிந்தது.

விரிவுரையாளர்களின் நேர்காணலின் போது இப்பீட மாணவர்களுக்கு மத்தியில் ஓர் ஆய்வுக் கலாசாரம் வேரூன்றி வளர்ந்து வருவதை அவதானிப்பதாக குறிப்பிட்டனர். இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழி பீடத்தில் இறுதியாக நடைபெற்ற நான்காவது சர்வதேச ஆய்வரங்கு அப்பீட மாணவர்களிலிருந்து 34 வீதமானோர் கலந்து கொண்டமை இக்கருத்தை மேலும் உறுதிப்படுத்துகின்றது.

கடந்த காலங்களில் இப்பீட மாணவர்களுக்கு மத்தியில் ஆய்வுசார் வறுமை காணப்பட்டபோதும் தற்பொழுது அந்நிலைமாறி ஆய்வுக் கலாசாரம் மாணவர்களுக்கு மத்தியில் மேம்பட்டுள்ளதை ஆய்வாளர்களாலும் இனங்காணப்பட்டது.

இப்பீட மாணவர்களுக்கு மத்தியில் இவ்வாறானதொரு ஆய்வுக் கலாசாரம் மிக அண்மைக்காலத்தில் எவ்வாறு மேம்பட்டுள்ளது என்பதை தேடலுக்கு உட்படுத்திய போது இன்னும் சில விடயங்களை அடையாளப்படுத்த முடிந்தது.

- **விரிவுரையாளர்கள் :**


மாணவர்களுக்கு மத்தியில் தேடலை ஏற்படுத்துவதற்கான வழிகாட்டலை பாடவிதானத்துடன் தனது கற்பித்தல்களை சுருக்கிக்கொள்ளாமல் அது தொடர்பான மேலதிக தகவல்களை மாணவர்களின் தேடலுக்கு விட்டதும் , அது தொடர்பான வழிகாட்டுதல்களும் ஆய்வு கலாசாரத்தை எற்படுத்துவதில் பங்காற்றியுள்ளன. அதிலும் குறிப்பாக இப்பீடத்தில் புதிதாக பலர் முதுகலைமானி , மற்றும் இன்னும் சிலர் கலாநிதிப் பட்டபடிப்பை நிறைவு செய்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தோரணையில் தற்போதைய பீடாதிபதி அவர்கள் மாணவர்களுக்கு மத்தியில் எழுத்துறையை வளரப்பதனை நோக்கமாக கொண்டு “சாளரம்” என்ற சுவர் சஞ்சிகையை உருவாக்கியதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

- **மாணவர் ஆய்வு மன்றம் (Students’ Reseach Forum - SRF):**

மிக அண்மைக் காலமாக மாணவர்களுக்கு மத்தியில் ஏற்பட்ட இந்த ஆய்வு மறுமலர்ச்சிக்கு இம்மன்றம் பாரிய பங்காற்றியுள்ளது என்பதை விரிவுரையாளர்களுடனான நேர்காணலிலிருந்தும், மாணவர்களுக்கு கொடுக்கப்பட்ட வினாக்கொத்தை அடிப்படையாக கொண்ட தரவின் மூலமும் அடையாளப்படுத்த முடியுமாக இருந்தது. இப்பீடத்தில் கடந்த காலங்களில் மாணவர்களுக்கு மத்தியில் ஆய்வு இல்லாமைகளும், போதாமைகளும் நிறையவே இருந்தாலும் தற்போது அந்நிலை மாறி மாணவர்களுக்கு மத்தியில் புதிய ஆய்வுக் கலாசாரமொன்று மலர்ந்து வருகின்றது. இந்த மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதில் மாணவர் ஆய்வு மன்றம் வழங்கிய பங்களிப்பை ஆராயும் முகமாக 2016-17 கல்வியாண்டில் கற்றுக்கொண்டிருந்த மூன்றாம் வருடத்தைச் சேர்ந்த மாணவர் ஆய்வு மன்ற உறுப்பினர்கள் 50 பேர் ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு வழங்கப்பட்ட வினாக்கொத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்கள் (வரைபுகள் மூலம்) பின்வருமாறு அமைகின்றன.


**வரைபு – 01**

ஆய்வை மேற்கொள்வதற்காக மாணவர்களுக்கு வழிகாட்டும் ஊடகங்கள் தொடர்பாக வினவப்பட்ட போது பின்வரும் வரைபு பெறுபேறாக அமைந்தது.



**வரைபு – 02**


மாணவர் ஆய்வு மன்றத்தினால் ஒழுங்கமைத்து நடாத்தப்படும் நிகழ்ச்சிகளின் பிரயோசனம் பற்றிய அளவீட்டை மதிப்பிட்ட போது கீழ்வரும் வரைபு கிடைக்கப்பெற்றது




வரைபு - 02

**வரைபு – 03**


ஆய்வின் கருவாக காணப்படும் வாசிப்புப் பழக்கம் பற்றிய கலந்துரையாடலில் பின்வரும் வரைபு முழுமைபெற்றது.




வரைபு - 03

**வரைபு – 04**


மாணவர் ஆய்வு மன்றத்தினால் ஆய்வு தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்ற நிலையில், ஆய்வுக்குட்படத்தப்பட்டவர்களிடம் 'என்னால் ஆய்வுக் கட்டுரை ஒன்றை சுயமாக எழுதும் இயலுமை உண்டென நம்புகின்றேன்' என்பது தொடர்பான திருப்தி நிலை பற்றி வினவிய போது இவ்வரைபு பிரதிபலிப்பாக அமைந்தது.




வரைபு - 04

**வரைபு – 05**

இஸ்லாமிய கற்கைகள், அறபு மொழிப் பீட 5வது சர்வதேச ஆய்வரங்கிற்கு ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தவர்கள் பற்றிய தகவலை ஆராய்ந்த பின்வரும் வரைபு முடிவாக பெறப்பட்டது.




வரைபு - 05

### முடிவுரை (CONCLUSION)

பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களுக்கு ஆய்வு என்பது மிக முக்கியமானதோர் விடயமாகும். இந்த ஆய்வுக் கலாசாரம் அவர்களுக்கு மத்தியில் மந்த நிலையை அடைந்தால், அது ஒரு நாட்டின் சகல துறைகளிலும் பாரிய பின்னடைவை ஏற்படுத்தும். இந்தவகையில் கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது பல்கலைக்கழக மாணவர்களுக்கு மத்தியில் ஆய்வுக் கலாசாரம் தற்பொழுது எந்நிலையில் இருக்கின்றது என்பது ஆய்வாளர்களால் அடையாளங் காணப்பட்டது. மாணவர்கள் ஆய்வுக் கலாசாரத்தில் ஈடுபட சவாலாக இருக்கும் விடயங்களை அடையாளப்படுத்தி அதற்கான ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக நாம் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட பீடத்தில் அண்மைக்காலமாக ஏற்பட்ட ஆய்வு மறுமலர்ச்சியையும் அதற்கு துணை செய்த காரணிகளும் கண்டறியப்பட்டுள்ளன.

கலந்துரையாடப்பட்ட விடயங்கள் அனைத்தையும் நோக்கும் போது, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப்பீட மாணவர்களுக்கு மத்தியில் கடந்த காலங்களுடன் ஒப்பிட்டு நோக்கும் [illegible]து ஆய்வுக் கலாசாரமானது மேம்பட்டுள்ளது என்பதைத் தீர்மானிக்கலாம். எனவே, பல்கலைச்சார் சமூகம் ஆய்வுப் பணிக்கு மேலும் பங்களிப்பு செய்ய வேண்டும் என்பது ஆய்வாளர்களின் எதிர்ப்பார்ப்பாகும்.

### பரிந்துரைகள் (RECOMMENDATION)

- ✓ இப்பீட மாணவர்களுக்கு மத்தியில் இவ்வாறானதோர் ஆய்வுச் சிந்தனையை மேம்படுத்துவது வரவேற்கத்தக்கது. இத்தகைய சிந்தனைகள் வளர்க்கப்படுவது எதிர்காலத்தில் இப்பீடத்துக்கும், பல்கலைக்கழகத்துக்கும், நாட்டுக்கும் பாரியதோர் பங்களிப்பை வழங்கும். பல்கலைக்கழக மாணவர்களுக்கு மத்தியில் ஆய்வுக்

கலாசாரத்தை பெரிதளவு ஏற்படுத்திய மாணவர் ஆய்வு மன்றம் இன்னும் வசதிகள், சலுகைகள் செய்து கொடுக்கப்பட வேண்டியதும் அவசியமாகும்.

- ✓ அவ்வாறே மாணவர்கள் ஆய்வில் ஈடுபட தடையாக உள்ள அம்சங்களை இனங்கண்டு முறையாக தீர்த்து வைக்கப்பட வேண்டும். அவர்கள் ஆய்வுகளில் ஈடுபடவும், அது தொடர்பான கலந்துரையாடலில் ஈடுபடவும், பிரத்தியேகமான இட ஒதுக்கீடு செய்து கொடுக்கப்படவும் வேண்டும். இவ்வாறு செய்யும் பட்சத்தில் மிகச் சிறந்த ஆய்வுக் கலாசாரத்தை மேம்படுத்த முடியும்.

- ✓ இம்மாணவர் ஆய்வு மன்றம் தமது பீடத்துடன் மாத்திரம் தமது பணிகளை சுருக்கிக் கொள்ளாது பல்கலைக்கழகத்தை மையப்படுத்தியதாக தமது பணிகளை விரிவுபடுத்த வேண்டும்.

- ✓ இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப்பீடத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆய்வுக் கலாசாரத்தை முன்மாதிரியாகக் கொண்டு ஏனைய பல்கலைக்கழகங்களும் அதன் நிர்வாகங்களும், மாணவர்களும் செயற்பட முன்வர வேண்டும். அவ்வாறானதோர் நிலை ஏற்படும் போது பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட உண்மை நோக்கங்களும், இலக்குகளும் அடையப்படும்.

**உசாத்துணை (REFERENCES)**

Proceeding of Faculty of Islamic Studies and Arabic Language. (2016). 2nd International Symposium. South Eastern University of Sri Lanka.

Proceeding of Faculty of Islamic Studies and Arabic Language. (2017). 3rd International Symposium. South Eastern University of Sri Lanka.

Proceeding of Faculty of Islamic Studies and Arabic Language. (2018). 4th International Symposium. South Eastern University of Sri Lanka.

Baporikar, Neeta. (2015). Strategies for Promoting Research Culture to Support Knowledge Society. International Journal of Information Communication Technologies and Human Development (IJICTHD). Retrieved August 5, 2019

D'Andrea, Vaneeta. Gosling, David (2000). Promoting Research in Teaching and Learning in Higher Education: two case studies of multi-disciplinary pedagogic research. University of Leicester: ESRC Teaching and Learning Research Programme, First Annual Conference. Retrieved August 3, 2019

Sahir, ILM, Kaleel, MIM, Ameer, MLF. (2012). *Aaivu Muraiyal*. South Eastern University of Sri Lanka: Faculty of Arts and Culture.

Wodarski, John. (1991). Promoting Research Productivity among University Faculty: An Evaluation. Retrieved August 3, 2019